சுருக்கம்

வேளாண்மை – உழவர் நலத் துறை – 2025-2026-ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை அறிவிப்புகள் – மாநில திட்டத்தின் கீழ் "முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள்" எனும் திட்டத்தினை ரூ.42 கோடி மாநில நிதியில் செயல்படுத்த நிர்வாக அனுமதி, நிதி ஒப்பளிப்பு மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் அங்கீகரித்தல் – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை – உழவர் நலத் (வே.உ.3) துறை

அரசாணை (நிலை) எண்.221

நாள்: 19.08.2025
திருவள்ளுவர் ஆண்டு, 2056
விசுவாவசு வருடம், ஆவணி 3

படிக்கப்பட்டவை:

1. மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2025-2026, நாள்: 15.03.2025.
2. வேளாண்மை இயக்குநரின் கடித எண்.பொது 2/35835/ 2025, நாள். 23.04.2025.

------

ஆணை:

தமிழ்நாடு அரசின் 2025-2026-ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இன்னபிறவற்றுடன் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:-

"தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் 4 ஆயிரம் வேளாண் பட்டதாரிகளும், 600-க்கும் மேற்பட்ட வேளாண் பட்டயதாரர்களும், வேளாண் கல்வியை நிறைவு செய்கின்றனர். இவர்களின் படிப்பறிவும், தொழில்நுட்பத்திறனும் உழவர்களுக்கு உதவியாக இருந்து, வேளாண்மை செழித்திட உதவிடும் வகையில் 1,000 முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் அமைக்கப்படும். இத்திட்டத்தில், 10 இலட்சம் ரூபாய் முதல் 20 இலட்சம் ரூபாய் மதிப்பிலான இம்மையங்கள் அமைத்திட 30 சதவீத மானியமாக 3 இலட்சம் ரூபாய் முதல் 6 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படும். இதற்கென 42 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இம்மையங்களில் உழவர்களுக்குத் தேவையான விதைகள், உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்கள் விற்பனை செய்யப்படுவதோடு, வேளாண் உற்பத்தியைப் பெருக்கவும், பயிர்களில் ஏற்படும் பூச்சி, நோய் மேலாண்மைக்கும் தேவையான ஆலோசனைகள் வழங்கப்படும். அத்துடன் நவீன தொழில்நுட்பங்கள், வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டுதல் குறித்த ஆலோசனைகளும் வழங்கப்படும்".

(த.பி.பா)

2. இவ்வறிவிப்பினை செயல்படுத்த பார்வை 2-இல் காணும் கடிதத்தில், வேளாண்மை இயக்குநர் அரசின் ஆணை வேண்டி கருத்துரு அனுப்பியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:-

குறிக்கோள்:-

i. விவசாயிகளுக்குத் தேவைப்படும் இடுபொருட்கள், ஆலோசனைகள் மற்றும் இதர சேவைகளை ஒரு குடையின் கீழ் வழங்குதல்.
ii. வேளாண் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு முடித்தவர்களைக் கொண்டு முதல்வரின் உழவர் நல சேவை மையம் அமைப்பதன் மூலம் சுய தொழில் தொடங்கிட ஊக்குவித்தல்.
iii. அவர்களின் கல்வி அறிவும், தொழில்நுட்பத்திறனும் உழவர்களுக்கு உதவும்படிச் செய்து வேளாண் விரிவாக்கத்தை கிராமப்புறங்களில் வலுப்படுத்துதல்.
iv. புதிய தொழில்நுட்பங்களை உழவர் நல சேவை மையம் மூலம் பரவலாக்குதல்.
v. வேளாண்மையை முன்னேற்றப் பாதையில் எடுத்துச் சென்று நீடித்த நிலையான கிராமப்புற வளர்ச்சிக்கு உறுதியளித்தல்.

உழவர் நல சேவை மையத்தின் பணிகள்:

இத்திட்டத்தில் இணைய விரும்பும் பயனாளிகள் தங்கள் பகுதி விவசாயிகளின் தேவைக்கேற்ப உழவர் நல சேவைகளை வழங்கலாம். இந்த சேவை மையங்கள் ரூ.10 இலட்சம் முதல் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட வேண்டும். இத்திட்டத்தில் இணையும் பயனாளிகள் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண் விற்பனை குறித்த தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குவதோடு வேளாண் இடுபொருட்கள் விற்பனை, வேளாண்மை சார்ந்த சேவை மையங்கள், பண்ணை இயந்திர வாடகை மையம் மற்றும் விளை பொருட்களை மதிப்புக் கூட்டுதல் போன்ற சேவைகள் வழங்கும் விதத்தில் அமைத்திட வேண்டு .

திட்ட இலக்கு

உழவர் நல சேவை மையங்கள் அமைப்பதற்கான துறைவாரியான பொருள் மற்றும் நிதி இலக்கு கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்படும்:-

| துறைகளின் பெயர் | பொருள் இலக்கு (எண்கள்) | | | நிதி இலக்கு (கோடியில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.10.00 இலட்சம் மதிப்பு | ரூ.20.00 இலட்சம் மதிப்பு | மொத்த பொருள் இலக்கு | ரூ.10.00 இலட்சம் மதிப்பு | ரூ.20.00 இலட்சம் மதிப்பு | மொத்த நிதி இலக்கு |
| வேளாண்மை | 300 | 200 | 500 | 9.00 | 12.00 | 21.00 |
| தோட்டக்கலை | 180 | 120 | 300 | 5.40 | 7.20 | 12.60 |
| வேளாண் வணிகம் | 60 | 40 | 100 | 1.80 | 2.40 | 4.20 |
| வேளாண்மைப் பொறியியல் | 60 | 40 | 100 | 1.80 | 2.40 | 4.20 |
| **மொத்தம்** | **600** | **400** | **1000** | **18.00** | **24.00** | **42.00** |

(த.பி.பா)

திட்ட வழிகாட்டு நெறிமுறையில் குறிப்பிட்டுள்ள தகுதிகள் உள்ள நபர்களை அனைத்துத் துறைகளும் தேர்வு செய்யலாம்.

**திட்டத்தின் பயன்கள்**

1. வேளாண் படிப்பு முடித்தவர்களுக்கு சுய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.
2. வேலையில்லா வேளாண் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரர்களுக்கு நிலையான வருமானத்தை உருவாக்க வழி வகுக்கும்.
3. உழவர் நல சேவை மையங்கள் மூலம் தரமான இடுபொருட்கள், இயற்கை வேளாண் இடுபொருட்கள் நியாயமான விலையில் விற்பனை செய்வதோடு விவசாயிகளுக்கு தேவைப்படும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல், வாடகைக்குப் பண்ணை இயந்திரங்களை வழங்குதல், சந்தை நிலவரம் குறித்த தகவல்கள் ஆகியவையும் ஒரே இடத்தில் வழங்கப்படும். மேலும் வேளாண் விளைபொருட்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்வதற்கும் உதவி செய்யப்படும்.
4. மேற்கண்ட சேவைகளுடன், வேளாண்மை – உழவர் நலத்துறையின் மூலமாக செயல்படுத்தப்படும் திட்டங்களில் பயனடைந்திட பயனாளிகளைப் பதிவு செய்தல் போன்ற இதர சேவைகளின் மூலம் விவசாயிகள் இலாபகரமான விவசாயத்தை மேற்கொள்ளலாம்.

3. மேற்கண்ட நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, 2025–2026–ஆம் நிதி ஆண்டில் வேளாண்மை / தோட்டக்கலை / வேளாண் பொறியியல் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு முடித்த 1000 நபர்கள் ரூ.10 இலட்சம் முதல் ரூ.20 இலட்சம் வரையிலான மதிப்பீட்டில் முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்களை வங்கிக் கடன் உதவியுடன் தொடங்கிட ஏதுவாக அவர்கள் பொருட்டு திட்ட மதிப்பீட்டில் 30 சதவீத மானியமாக ரூ.3 இலட்சம் முதல் ரூ.6 இலட்சம் வரை சம்மந்தப்பட்ட வங்கிகளுக்கு வழங்கும் வகையில் பின்வரும் இனங்களின் மீது அரசின் ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார் :–

i. "முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள்" திட்டத்தினை செயல்படுத்த ரூ.42 கோடி மாநில நிதி ஒதுக்கீடு செய்ய நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பும் திட்டக் கூறுகளுக்கான பொதுவான மற்றும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை அங்கீகரித்தும் ஆணை,
ii. 1000 முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் ரூ.42 கோடி செலவில் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகம் மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டத்திற்கான நிதியை வேளாண்மை இயக்குநர் அவர்கள் பெற்று பிற துறைகளுக்கு ஒதுக்கீடு செய்ய அனுமதி,
iii. இத்திட்டத்தைத் திறம்பட செயல்படுத்தத் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ள வேளாண்மை இயக்குநருக்கு உரிய அதிகாரம் வழங்குதல்,
iv. களநிலவரத்திற்கேற்ப இத்திட்டத்திற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகளில் மாற்றம் ஏதேனும் தேவைப்படின் மாநில அளவிலான

(த.பி.பா)

தேர்வுக் குழுவின் பரிந்துரைப்படி வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் ஒப்புதல் வழங்குவதற்கு ஆணை.

4. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாகப் பரிசீலித்து, 2025-2026-ஆம் நிதி ஆண்டில் வேளாண்மை / தோட்டக்கலை / வேளாண்மைப் பொறியியல் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு முடித்த 1000 நபர்கள் ரூ.10 இலட்சம் முதல் ரூ.20 இலட்சம் வரையிலான மதிப்பீட்டில் முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்களை வங்கிக் கடன் உதவியுடன் தொடங்கிட ஏதுவாக அவர்கள் பொருட்டு திட்ட மதிப்பீட்டில் 30 சதவீத மானியமாக ரூ.3 இலட்சம் முதல் ரூ.6 இலட்சம் வரை சம்மந்தப்பட்ட வங்கிகளுக்கு வழங்கும் வகையில் ரூ.42 கோடி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2401 00 பயிர் வளர்ப்பு - 104 வேளாண்மை பண்ணைகள் - மாநில செலவினங்கள் AN - தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் - 311 மானியங்கள் - 01 தனித்திட்ட மானியம்"
**(DP Code: 2401 - 00 - 104-AN 31101)"- ரூ. 42 கோடி**

6. மேலும் (i) திட்டக் கூறுகளுக்கான பொதுவான மற்றும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை இணைப்பு-1 இல் உள்ளவாறு அங்கீகரித்தும் (ii) 1000 முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் ரூ.42 கோடி செலவில் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகம் மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டத்திற்கான நிதியை வேளாண்மை இயக்குநர் அவர்கள் பெற்று பிற துறைகளுக்கு ஒதுக்கீடு செய்ய அனுமதி வழங்கியும் (iii) இத்திட்டத்தைத் திறம்பட செயல்படுத்தத் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ள வேளாண்மை இயக்குநருக்கு உரிய அதிகாரம் வழங்கியும் (iv) களநிலவரத்திற்கேற்ப இத்திட்டத்திற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகளில் மாற்றம் ஏதேனும் தேவைப்படின் மாநில அளவிலான கண்காணிப்புக் குழுவின் பரிந்துரைப்படி வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் ஒப்புதல் வழங்கவும் அரசு ஆணையிடுகிறது.

7. மேலும், இத்திட்டத்தினை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு செயல்படுத்த வேண்டும் என வேளாண்மை இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்:-

I. இத்திட்டத்திற்கான மூலதன மானியம் 30 சதவீதமாகும். இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அதிகபட்ச மானியம் ரூ.6 இலட்சமாகும். பயனாளி மாநில அரசு திட்டங்கள் / மத்திய அரசு பகிர்வுத் திட்டங்களில் ஏற்கனவே மானியம் பெற்றிருந்தால், இந்தத் திட்டத்தின் கீழ் வித்தியாசத் தொகை மட்டுமே மானியமாக வழங்கப்பட வேண்டும். (அதாவது முதலமைச்சரின் உழவர் நல சேவை மைய திட்டத்தின் கீழ் பெறப்படும் அதிகபட்ச மானியத்திலிருந்து (6 இலட்சம்) மாநில அரசு / மத்திய அரசு / நபார்டு திட்டங்களின் கீழ்

(த.பி.பா)

அனுமதிக்கப்பட்ட மானியத்தைத் தவிர்த்து மீதமுள்ளவை மானியமாக வழங்கப்பட வேண்டும்).

II. வேளாண்மை – உழவர் நலத் துறையில் துறைத் தலைவர்களால் வழங்கப்படும் அனைத்து உரிமங்களும் முதலமைச்சரின் உழவர் நல சேவை மையப் பயனாளிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். இருப்பினும், அப்பயனாளிகள் எந்தவொரு குறிப்பிட்ட பொருளையும் விற்பனை செய்ய கட்டாயப்படுத்தப்படக்கூடாது.

III. பயனாளிகள் தங்களது விண்ணப்பங்களை நேரடியாக வங்கிகளில் சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் இந்தத் திட்டத்தில் 1000 முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் அனுமதிக்கப்படும். இதில் 30% பயனாளிகள் பெண்கள் மற்றும் ஆதிதிராவிடர் / பழங்குடியினராக இருக்கவேண்டும்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.10318619/நிதித் (வேளாண்மை–உழவர் நலன்) துறை, நாள்.19.08.2025–இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வ.தட்சிணாமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்**

**பெறுநர்**

இயக்குநர், வேளாண்மைத்துறை, சென்னை–5.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை–5.
ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், சென்னை–32.
தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மைப் பொறியியல் துறை, சென்னை–35.
துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை, சென்னை–5.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி மேம்பாட்டு முகமை, சென்னை–5.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்–3.
இயக்குநர், விதைச்சான்று மற்றும் உயிர்மச் சான்றுத் துறை, சென்னை–32.
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், சென்னை–10.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி, சென்னை–1.
பொது மேலாளர், நபார்டு வங்கி, சென்னை–34.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
முதன்மை மாநில கணக்காயர் (G&SSA), சென்னை–18.
முதன்மை மாநில கணக்காயர் (E&SSA), சென்னை–18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை –9.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.

(த.பி.பா)

நகல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
தலைமைச் செயலகம், சென்னை – 9.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை –9.

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–9.

தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை –9.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், வேளாண்மை– உழவர் நலத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.

நிதித் (வேளாண்மை–உழவர் நலன்) துறை, சென்னை–9.

கோப்பு எண்.10318619/வே.உ.3/2025

இருப்பு கோப்பு/உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(பொ. ரவி)
அரசு சார்புச் செயலாளர்

(த.பி.பா)

**இணைப்பு-1**

(அரசாணை (நிலை) எண்.221, வேளாண்மை – உழவர் நலத் (வே.உ.3) துறை, நாள்: 19.08.2025)

**"முதலமைச்சரின் உழவர் நல சேவை மையம்" திட்டக்கூற்றினை செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்**

1. **செயல்படுத்தப்படவிருக்கும் மாவட்டங்கள்:**

   இத்திட்டம் சென்னை தவிர அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும்.

2. **செயல்படுத்தவிருக்கும் துறைகள் :**

   இத்திட்டம் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகம் மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறைகள் மூலம் செயல்படுத்தப்படும்.

3. **பயன்களைப் பெறுவதற்கான தகுதிகள்**
   1. வயது வரம்பு: 20 – 45
   2. கல்வித் தகுதி: வேளாண்மை / தோட்டக்கலை / வேளாண் வணிகம் / வேளாண்மைப் பொறியியல் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு
   3. அரசு மற்றும் அரசுசார் நிறுவனத்தில் பணியில் இருத்தல் கூடாது.
   4. வங்கி மூலம் கடன் பெற்று தொழில் புரிவோர் நிறுவனத்தின் உரிமையானது தனியுரிமையாக இருக்க வேண்டும்.
   5. விண்ணப்பதாரர் அடிப்படைக் கணினித்திறன் பெற்றிருக்க வேண்டும்.
   6. ஒரு குடும்பத்தில் ஒரு நபர் மட்டுமே நிதி உதவி பெற தகுதியுடையவர்.

4. **விண்ணப்பிக்கத் தேவையான ஆவணங்கள்**
   1. 10 மற்றும் 12 ஆம் வகுப்புச் சான்றிதழ்
   2. பட்டப்படிப்பு / பட்டயப்படிப்புச் சான்றிதழ்
   3. ஆதார் அட்டை
   4. குடும்ப அட்டை
   5. சரக்கு மற்றும் சேவை வரி எண் (GST No)
   6. நிரந்தரக் கணக்கு எண் அட்டை (PAN card)
   7. வகுப்புச் சான்றிதழ் ( Community Certificate)
   8. பயனாளியின் வங்கிக் கணக்குப் புத்தகம்
   9. வங்கியிடம் இருந்து பெறப்பட்ட கடன் ஒப்புதல் ஆவணம்
   10. விரிவான திட்ட அறிக்கை

5. **பயன்களைப் பெறுவதற்கான நிபந்தனைகள்**
   1. உழவர் நல சேவை மையம் அமைக்க விரும்பும் வேளாண் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு முடித்த நபர்கள் விதை விற்பனை உரிமம், உரம் மற்றும் பூச்சிகொல்லி மருந்து விற்பனை செய்வதற்கான உரிமம் பெற்றிருக்க வேண்டும்.

(த.பி.பா)

2. இத்திட்டத்தில் இணையும் பயனாளிகளிடம் உரிமம் இல்லாமல் இருப்பின், முன்னுரிமை அடிப்படையில் தேவையான உரிமங்கள் பெறுவதற்கு வேளாண்மைத் துறை உதவி புரிந்திடும்.
3. இத்திட்டத்தில் இணைய விரும்பும் வேளாண்மை சார்ந்த பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு படித்த நபர்கள் ரூ.10 இலட்சம் முதல் ரூ.20 இலட்சத்திற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரித்து தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அல்லது கூட்டுறவு வங்கியில் கடனுதவி பெற வேண்டும். மேலும், வங்கிக் கடன் வழங்கிய உத்தரவுக் கடிதத்தினைச் சமர்ப்பித்தபின் விண்ணப்பம் பரிசீலிக்கப்படும்.
4. இத்திட்டத்தில் இணைய விரும்பும் விண்ணப்பதாரர்கள், உழவர் நல சேவை மையங்கள் அமைக்க விரும்பும் மதிப்பீட்டுக்கு ஏற்றவாறு விரிவான திட்ட அறிக்கையைத் தயாரித்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
5. இத்திட்டத்தில் வழங்கப்படும் சேவைகள் அனைத்து விவசாயிகளுக்கும் சென்றடையும் நோக்கில் செயல்படுத்த வேண்டும். எனவே, கிராம பஞ்சாயத்துகளைத் தேர்வு செய்யும் போது, விவசாய சேவை மையங்கள் இல்லாத கிராம பஞ்சாயத்துகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**6. உழவர் நல சேவை மையம் அமைப்பதற்கான இடம்**

1. சொந்த இடம் (அல்லது) வாடகை / குத்தகை ஒப்பந்தம்
2. சொந்த இடமாக இருப்பின் சொத்து வரி ரசீது /மின்சார கட்டண ரசீது / குடிநீர்வரி ரசீது.
3. வாடகை இடமாக இருப்பின் உரிமையாளரின் ஒப்புதல் கடிதம் (NOC) இணைக்கப்பட வேண்டும்.

**7. தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள்**

1. ரூ.10 இலட்சம் மதிப்பில் தொடங்கும் உழவர் நல சேவை மையம் குறைந்தபட்சம் 300 சதுர அடி கார்பெட் பரப்பிலும், ரூ.20 இலட்சம் மதிப்பில் தொடங்கும் உழவர் நல சேவை மையம் குறைந்தபட்சம் 600 சதுர அடி கார்பெட் பரப்பிலும் இருக்க வேண்டும்.
2. உழவர் நல சேவை மையங்கள் தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட மாதிரி அமைப்பில் (Type design) நிறுவப்பட வேண்டும். தவிர்க்க இயலாத காரணங்களால் மாற்றம் தேவைப்படின், சம்பந்தப்பட்ட துறைத் தலைவரின் அனுமதி பெற்று மாற்றம் செய்யலாம்.
3. வேளாண் இடுபொருட்கள் விற்பனைக்குத் தனியான இடம் மற்றும் சேமிப்பு கிடங்கிற்குத் தனியான இடம் ஒதுக்கிட வேண்டும்.
4. வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி விற்பனை செய்ய விரும்பும் நபர்கள் அல்லது பண்ணை இயந்திரங்களை வாடகைக்கு வழங்க விரும்பும் நபர்கள் அதற்கான கட்டமைப்பு வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு அமைக்கப்படும் மதிப்புக்

(த.பி.பா)

கூட்டு மையங்களை வேளாண் இடுபொருட்கள் சேமிப்புக் கிடங்கு மற்றும் விற்பனை செய்யும் இடங்களின் அருகே அமைக்கக் கூடாது.

5. உழவர் நல சேவை மைய கட்டமைப்புகள் கணினி, பிரிண்டர், மின்னணு விற்பனை இயந்திரம் (POS machine) மற்றும் இணைய சேவை வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

8. **முதலமைச்சரின் உழவர் நல சேவை மையத்தின் பணிகள்**

I. **உழவர் நல சேவை மையத்தில் வழங்கப்படும் சேவைகள்**

1. **விதைகள் விநியோகம்** : அரசு மற்றும் தனியார் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட தரமான விதைகளை விவசாயிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையில் வழங்க நடவடிக்கை எடுத்திட வேண்டும். தரமான விதைகளை உற்பத்தி செய்து Tamil Nadu State Seed Development Agency (TANSEDA) அமைப்பின் மூலம் விநியோகம் செய்ய விருப்பம் உள்ளவர்களுக்கு வேளாண்மைத் துறை உதவி புரிந்திடும்.
2. **உரங்கள் விநியோகம்** : விவசாயிகளுக்குத் தேவையான தரமான இயற்கை உரங்கள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள் மற்றும் இரசாயன உரங்கள் வழங்கிட நடவடிக்கை எடுத்திட வேண்டும்.
3. **பூச்சிக்கொல்லி விநியோகம்** : விவசாயிகளுக்குத் தேவையான தரமான பயிர் பாதுகாப்பு மருந்துகளான இரசாயன பூச்சிக்கொல்லிகள், உயிரி பூச்சிக்கொல்லிகள், தாவரம் சார்ந்த பூச்சிக்கொல்லிகள் வழங்கிட நடவடிக்கை எடுத்திட வேண்டும்.
4. **மண் மற்றும் நீர் மாதிரி ஆய்வு செய்திட உதவுதல்:** விவசாயிகள் நிலத்தில் மண் மற்றும் நீர் மாதிரி சேகரித்து பரிசோதனைக்காக மண் பரிசோதனை நிலையங்களுக்கு அனுப்புவதோடு மண் பரிசோதனை நிலையங்களிலிருந்து பெறப்பட்ட முடிவுகளை விவசாயிகளுக்கு எடுத்துரைத்து மண்வளத்திற்கு ஏற்றவாறு உரங்களை பரிந்துரைக்க வேண்டும்.
5. **நுண்ணீர்ப்பாசனத் திட்டம்:** உழவர் நல சேவை மையப் பயனாளிகளை இத்திட்டத்தில் முகவர்களாக இணைத்து நுண்ணீர்ப்பாசன வசதிகளை விவசாயிகளுக்கு செய்து கொடுக்க வேண்டும்.
6. **பயிர்க் காப்பீட்டுத் திட்டம்** : உழவர் நல சேவை மையத்தில் வேளாண் பட்டதாரிகள் / பட்டயதாரர்கள் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் விவசாயிகளைப் பதிவு செய்திடலாம். இ-சேவை மையம் நடத்துவதற்கான உரிமம் பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
7. **டிரோன் சேவை** : முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் மூலமாக டிரோன் மூலம் உரமிடல் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்து தெளித்தல் போன்ற சேவைகளை வழங்கிடலாம்.
8. **உழவர் கடன் அட்டை** : உழவர் கடன் அட்டையின் நன்மைகளை விவசாயிகளுக்கு எடுத்துரைத்து தேவைப்படும் விவசாயிகளுக்கு

(த.பி.பா)

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்/ கூட்டுறவு வங்கிகளிடம் உழவர் கடன் அட்டை பெற உதவிட வேண்டும்.

9. **பயிர்க் கடன்**: கூட்டுறவு மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பயிர்க் கடன் பெறுவதற்கான ஆலோசனைகளை விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டும்.
10. **கால்நடைத் தீவனம்**: கால்நடைகளுக்குத் தேவையான தீவனம் குறித்த ஆலோசனைகள் வழங்கிட வேண்டும்.
11. **வேளாண் இயந்திரங்கள் பழுது பார்க்கும் பட்டறை** : வேளாண் இயந்திரங்கள் மற்றும் மின் மோட்டார்கள் பழுது பார்க்கும் பட்டறை அமைத்து விவசாயிகளுக்கு உதவிடலாம். இத்தொழிலை மேற்கொள்ள முன்வரும் பயனாளிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.

**முத்தரப்பு ஒப்பந்தம்:**

மேற்குறிப்பிட்டுள்ள சேவைகளில், விதை, உரம் மற்றும் பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் உற்பத்தியாளர்களிடமிருந்து முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்களுக்கு குறைவான விலையில் பெறுவதற்கான முத்தரப்பு ஒப்பந்தத்தினை முதலமைச்சரின் உழவர் நல சேவை மைய பயனாளிகள், சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் மாவட்ட இணை இயக்குநர்கள் செய்து கொள்ளலாம்.

**II. வேளாண் விளைபொருட்களை சந்தைப்படுத்துதல்:**

1. அறுவடை காலத்திற்கு முன்பே தங்கள் பகுதி விவசாயிகளின் விளைபொருட்களை இலாபம் தரக்கூடிய அளவில் சந்தையில் விற்பனை செய்வதற்கு ஏதுவாக சந்தை நிலவரத்தை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.
2. விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் இடையே தொடர்பு ஏற்படுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
3. இணைய வர்த்தகத் தளங்கள் வாயிலாக விவசாயிகளுக்கும், வணிகர்களுக்கும் தொடர்பு ஏற்படுத்தி கிராம அளவிலான சந்தை வாய்ப்புகளை வலுப்படுத்த வேண்டும்.

**III. வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டுதல்:**

முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்களில் வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி விற்பனை செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு, மதிப்புக்கூட்டி விற்பனை செய்வதற்கான கட்டமைப்புகளை உருவாக்கிட வேண்டும். அதன் மூலம் விவசாயிகளுக்கு விளைபொருட்களை மதிப்புக்கூட்டி வழங்கிட வேண்டும் அல்லது விளைபொருட்களை மதிப்புக்கூட்டு தொழிலில் ஈடுபட்டுள்ள உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்குப் பரிந்துரை செய்திடலாம்.

**IV. வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்குதல்**

முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள் மூலமாக சிறிய இயந்திரங்கள் மற்றும் அதன் மூலம் இயங்கக்கூடிய கருவிகள் உள்ளிட்ட

(த.பி.பா)

வேளாண் இயந்திரங்கள், கருவிகள் அரசு நிர்ணயித்த வாடகையில் உழவர்களுக்கு வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும். டிரோன்களையும் அமைத்து உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள் தெளிப்பு சேவைகளை வழங்கலாம்.

**V. முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்களில் வழங்கப்படும் ஆலோசனைகள் :**

1. வேளாண் பயிர்கள் மற்றும் தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடிக்குத் தேவைப்படும் அனைத்து தொழில்நுட்பங்களையும் விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டும்.
2. அவ்வப்போது விவசாயிகளின் வயல்களில் ஏற்படும் களப்பிரச்சினைகளை நேரில் ஆய்வு செய்து வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறையால் பரிந்துரைக்கப்படும் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டும்.
3. மாற்றுப்பயிர் சாகுபடி, ஒருங்கிணைந்த பண்ணையம், மண்வள மேம்பாடு, நன்னெறி வேளாண் முறைகள், ஒருங்கிணைந்த உர மேலாண்மை, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள், சந்தைசார் வேளாண்மை ஆகியவற்றை விவசாயிகளிடையே பரவலாக்கம் செய்வதுடன் அதற்கான இடுபொருட்கள், தொழில்நுட்பங்களையும் விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும்.

மேற்கண்ட சேவைகளைத் தவிர, பிற வேளாண் சார்ந்த சேவைகளையும் அந்தந்த பகுதிகளின் தேவைக்கு ஏற்றாற்போல் வழங்கலாம்.

**9. உழவர் நல சேவை மையங்களுக்கு அரசால் வழங்கப்படும் இதர உதவிகள்**

1. விதைகள், உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை விற்பனை செய்ய உரிமம் இல்லாத நபர்களுக்கு கட்டணமில்லாமல் விற்பனை உரிமம் வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
2. தரமான விதைகள், உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை சந்தை விலையை விடக் குறைவான விலையில் பயனாளிகளுக்கு வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
3. Agricultural Technology Management Agency (ATMA) திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் செயல் விளக்கங்களை விவசாயிகளுக்கு செய்து காண்பித்திட முன்னுரிமை வழங்கப்படும்
4. விவசாயிகள் உழவர் நல சேவை மையத்தினைப் பயன்படுத்திட ஊக்குவிக்கப்படுவார்கள்.

**10. திட்டம் செயல்படுத்தும் முறை**

**(i) முன்னுரிமை :**

1. 2025-2026-ஆம் ஆண்டில் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும் 2,338 கிராம பஞ்சாயத்துகளில் தொழில் தொடங்க விண்ணப்பிக்கும் நபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் (PMFME) அல்லது வேளாண்மை உட்கட்டமைப்பு நிதி (AIF) திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதியுதவி

பெற்று வங்கிக் கடனுடன் வேளாண் சார்ந்த தொழிலை தொடங்க முன்வரும் நபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3. அண்ணல் அம்பேத்கர் வணிக சாம்பியன்ஸ் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதியுதவி பெற்று வங்கிக் கடன் உதவியுடன் வேளாண் சார்ந்த தொழிலை தொடங்க முன்வரும் நபர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. வேளாண்மைத் துறையின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட "வேளாண் பட்டதாரி இளைஞர்களை தொழில் முனைவோர் ஆக்குதல்" திட்டத்தில் இணைந்து சிறப்பாக செயல்பட்டு வரும், தகுதி வாய்ந்த 10 சதவீத தொழில்முனைவோர்கள் இத்திட்டத்தில் பயன்பெற முன்னுரிமை அளிக்கப்படும்.
5. இத்திட்டத்திற்காக அதிகபட்சமாக விண்ணப்பங்கள் பெறப்படுமாயின் அவற்றுள் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6. **கூடுதல் நிதியுதவி:**

   கடந்த 2021-2022-ஆம் ஆண்டு முதல் 2024-2025 வரை "வேளாண் பட்டதாரி இளைஞர்களை தொழில் முனைவோர் ஆக்குதல்" திட்டத்தின் கீழ் அக்ரி கிளினிக் மற்றும் இடுபொருள் விற்பனை மையங்கள் அமைத்த வேளாண் பட்டதாரி இளைஞர்களுக்கு இத்திட்டத்தில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மானியம் வழங்கப்படும்:-

   a) கடந்த ஆண்டுகளில் அக்ரிகிளினிக் மற்றும் இடுபொருள் விற்பனை மையங்கள் அமைத்த வேளாண் பட்டதாரி தற்போது ட்ரோன் சேவை, இயந்திரங்களை வாடகைக்கு விடுதல், மதிப்புக்கூட்டுதல், வேளாண் இயந்திரங்களைப் பழுது பார்க்கும் நிலையங்கள் போன்ற சேவைகளை அளிக்கும் பட்சத்தில் முன்னுரிமை அளிக்கப்படும்.

   b) இத்திட்டத்தில் பயனாளிகள் ரூ.1 இலட்சம் மானியம் கடந்த ஆண்டுகளில் பெற்றிருப்பதால், விரிவான திட்ட அறிக்கையைப் பொருத்து ஒரு இலட்சம் போக மீதம் உள்ள தொகை அதாவது ரூ. 2 இலட்சம் முதல் ரூ. 5 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படும்.

**ii) விளம்பரப்படுத்துதல்**

அனைத்து மாவட்டங்களிலும் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல் மற்றும் வேளாண் வணிகத் துறை சார்ந்த அலுவலர்கள், இத்திட்டம் குறித்து செய்தித்தாள், தொலைக்காட்சி மற்றும் வாட்ஸ்அப் குழுக்கள் மூலம் விளம்பரங்கள் செய்யவேண்டும். மேலும், அந்தந்த மாவட்டத்திலுள்ள வேளாண் கல்லூரிகளில் முகாம்கள் நடத்தி, இத்திட்டம் குறித்த விபரங்களை வேளாண் கல்லூரி மாணவர்களிடத்தில் பரவலாக்கம் செய்திட வேண்டும்.

(த.பி.பா)

**iii) பதிவு செய்தல்:**

இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் வேளாண் சார்ந்த பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு முடித்த நபர்கள் உரிய வங்கியில் விரிவான திட்ட அறிக்கையுடன் கடன் பெற விண்ணப்பிக்க வேண்டும். வங்கி நடைமுறைகளைப் பின்பற்றி கடன் ஒப்புதல் பெறப்பட்டபின், இத்திட்டத்தில் மானிய உதவி பெற வேண்டி, AGRISNET இணையதளத்தில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து விண்ணப்பிக்க வேண்டும். வேளாண் கட்டமைப்பு நிதி வலைதள முகப்பில் (Agriculture Infrastructure Fund Portal) முதலில் விண்ணப்பித்தால் 9 சதவீத வட்டியில் கடன் பெற வாய்ப்புள்ளது. மேலும், தகுதியான திட்டக்கூறுகளுக்குண்டான கடன் தொகைக்கு வேளாண் உட்கட்டமைப்பு நிதி திட்டத்தில் (AIF) 3 சதவீத வட்டி மானியம் பெறலாம்.

மேலும், விண்ணப்பதாரரிடத்தில், உழவர் நல சேவை மையத்தில் இடுபொருட்கள் விற்பனை செய்வதற்குத் தேவையான உரிமங்கள் இல்லாதபட்சத்தில், விண்ணப்பிக்கும்போதே உரிமங்கள் பெறுவதற்கு, உரிய படிவங்களில் AGRISNET இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். (விதை உரிமம் – படிவம் A, உர உரிமம் – படிவம் A1, பூச்சிக்கொல்லி மருந்து உரிமம் – படிவம் II)

**iv) மானியம் பெறுவதற்குத் தகுதியான விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை**

1. முதலமைச்சரின் உழவர் நல சேவை மையம் திட்டத்தில் மானியம் பெற விரும்பும் பயனாளிகள் AGRISNET வலைதளத்தின் மூலம் இணைப்பு 2–இல் கண்ட படிவத்தில் விண்ணப்பி க வழிவகை செய்யப்படும்.

2. AGRISNET இணையதளத்தில் பெறப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்களை சம்மந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநர்கள் / தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் / வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) / உதவிப் பொறியாளர்கள் (வேளாண்மைப் பொறியியல் துறை), சரிபார்த்து, தகுதியான விண்ணப்பங்களைப் பெற்ற 2 நாட்களுக்குள் தங்கள் மாவட்ட துறைத் தலைவருக்கு பரிந்துரைக்க வேண்டும்.

3. விண்ணப்பங்களில் ஏதேனும் குறைபாடுகள் அல்லது உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்காமல் இருக்கும் பட்சத்தில், 3 நாட்களுக்குள் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு மீள சமர்ப்பிக்க வேண்டும்.

4. மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் / தோட்டக்கலை துணை இயக்குநர்கள் / வேளாண் துணை இயக்குநர்கள் (வேளாண் வணிகம்) / செயற்பொறியாளர்கள் (வேளாண்மைப் பொறியியல் துறை), தகுதியான விண்ணப்பங்களை இணையதளத்தில் ஆய்வு செய்து, மாவட்ட அளவிலான தேர்வுக் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

5. மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட அளவிலான தேர்வுக் குழு கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டு தகுதியான பயனாளிகளைத் தேர்வு செய்து மாநில அளவிலான குழுவிற்கு பரிந்துரை செய்யும்:–

| வ. எண் | மாவட்ட அளவிலான தேர்வுக் குழு | அலுவலர்கள் |
|---|---|---|
| 1. | தலைவர் | மாவட்ட ஆட்சியர் |
| 2. | உறுப்பினர்கள் | 1. வேளாண்மை இணை இயக்குநர்<br>2. செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல் துறை)<br>3. தோட்டக்கலை துணை இயக்குநர்.<br>4. வேளாண் துணை இயக்குநர் (வேளாண் வணிகம்)<br>5. முன்னோடி வங்கி மேலாளர் (LDM)<br>6. மேலாண்மை இயக்குநர், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி<br>7. பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் (DIC)<br>8. துணை பொது மேலாளர், நபார்டு வங்கி |

6. வேளாண்மை இயக்குநர் அவர்களின் தலைமையிலான மாநில தேர்வுக் குழு கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டு துறை வாரியாகப் பெறப்படும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து, பயனாளிகள் பட்டியலை இறுதி செய்திடும்:–

| வ. எண் | மாநில அளவிலான தேர்வுக் குழு | அலுவலர்கள் |
|---|---|---|
| 1. | தலைவர் | வேளாண்மை இயக்குநர் |
| 2. | உறுப்பினர்கள் | 1. ஆணையர், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை<br>2. இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை<br>3. பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள்<br>4. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி<br>5. தலைமைப் பொறியாளர், வேளாண் பொறியியல் துறை<br>6. பொது மேலாளர், நபார்டு வங்கி<br>7. ஒருங்கிணைப்பாளர், மாநில அளவிலான வங்கியாளர் குழு |

(த.பி.பா)

மாநில அளவிலான தேர்வுக் குழு ஒப்புதல் பெற்ற பிறகு உழவர் நல சேவை மையம் தொடங்குவதற்கான பணிகளை மேற்கொள்ளலாம். மாநில தேர்வுக் குழு, மாநில அளவிலான வங்கியாளர் குழு ஒருங்கிணைப்பதன் மூலம் கடன் வழங்குவதைக் கண்காணிப்பதுடன் மானிய உதவி வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்கும்.

**11. உழவர் நல சேவை மையங்கள் அமைத்தல்**

வட்டார அளவில் அனைத்துத் துறை சார்ந்த அலுவலர்களும் தங்கள் துறையின் உதவியுடன் பதிவு செய்யப்பட்ட பயனாளிகள், அங்கீகரிக்கப்பட்ட மாதிரி வடிவத்தில் உழவர் நல சேவை மையங்களை அமைக்கும் பணியைக் கண்காணித்து விரைவில் முடித்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**12. பயிற்சி:**

இத்திட்டத்தில் இணையும் பயனாளிகள் உழவர் நல சேவை மையங்களை திறம்பட நிர்வகிக்கும் பொருட்டு 15 நாட்களுக்கு மாவட்டங்களில் உள்ள உழவர் பயிற்சி நிலையம் / வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படும்.

தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வேளாண் தொழில்நுட்பங்கள், பயிர் உற்பத்தி மற்றும் பாதுகாப்பு முறைகள் மற்றும் வேளாண்மை – உழவர் நலத்துறை செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து 4 நாட்கள் வகுப்பறைப் பயிற்சியும் 11 நாட்கள் வயல்வெளிப் பயிற்சியும் வழங்கப்படும்.

**13. கண்காணித்தல்**

முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்களை அமைத்தல் மற்றும் அவற்றின் செயல்பாடுகளை மாநில தேர்வு குழு கண்காணிப்பு செய்திடும்.

**மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு**: உழவர் நல சேவை மையப் பணிகளை ஆய்வு செய்ய மாவட்ட அளவில் வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் தலைமையில், தோட்டக்கலை துணை இயக்குநர், வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) மற்றும் செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல் துறை) ஆகியோரை உறுப்பினர்களாக கொண்ட மாவட்ட கண்காணிப்புக் குழு, உழவர் நல சேவை மையங்களைத் தொடர்ந்து மதிப்பாய்வு செய்ய வேண்டும். வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) இக்குழுவின் ஒருங்கிணைப்பாளராக செயல்படுவார்.

**14. நிதி விடுவிப்பு**

மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுவின் பரிந்துரையின் படி, சம்மந்தப்பட்ட துறைகள் இரண்டு தவணைகளில் கீழ்க்கண்டவாறு நிதி விடுவித்திட வேண்டும்:–

1. **முதல் தவணை**: உட்கட்டமைப்பு வசதிகள் முடிவுற்றவுடன் அரசு வழங்கும் மானிய தொகையில் 50% முதல் தவணையாக சம்மந்தப்பட்ட வங்கிக்கு விடுவிக்கப்படும்.

(த.பி.பா)

2. **இரண்டாவது தவணை:** உழவர் நல சேவை மையத்தி இடுபொருட்கள் விற்பனை, ஆலோசனை வழங்குதல் பணி மற்றும் மதிப்புக் கூட்டுதல் பணிகளை மாவட்ட கண்காணிப்பு குழு ஆய்வு செய்து நல்ல முறையில் பணிகள் நடப்பதை உறுதி செய்து, பணிகள் தொடங்கிய 3 மாத காலத்திற்குள் வங்கிக்கு இரண்டாம் தவணை நிதி விடுவிக்கப்படும்.

வ. தட்சிணாமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

(த.பி.பா)

## இணைப்பு -2

(அரசாணை (நிலை) எண்.221, வேளாண்மை-உழவர்நலத் (வே.உ.3)
துறை, நாள்: 19.08.2025)

**முதலமைச்சரின் உழவர் நல சேவை மையம் மானிய விண்ணப்பப் படிவம்**
(அக்ரிஸ்நெட் வலைதளத்தில் பதிவேற்றம்)

| வ. எண். | விண்ணப்பதாரரின் விவரம் | |
|---|---|---|
| 1 | விண்ணப்பதாரரின் பெயர் | |
| 2 | தந்தை / கணவரின் / மனைவியின் பெயர் | |
| 3 | பிறந்த தேதி | |
| 4 | பாலினம் (ஆண் / பெண் / மூன்றாம் பாலினத்தவர்) | |
| 5 | வகுப்பு | |
| 6 | கைப்பேசி எண் | |
| 7 | மின்னஞ்சல் முகவரி | |
| 8 | தொடர்புகொள்ள வேண்டிய முகவரி | |
| 9 | நிரந்தர முகவரி | |
| 10 | வங்கி விவரங்கள் | வங்கியின் பெயர்.<br>கிளை.<br>IFSC எண்.<br>வங்கி கணக்கு எண். |
| 11 | ஆதார் எண் | |
| 12 | ஜிஎஸ்டி எண் | |
| 13 | கல்வித் தகுதி | பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு பெயர்<br>பல்கலைக்கழகம்<br>மதிப்பெண்<br>தேர்ச்சி பெற்ற வருடம் |
| | பதிவேற்றம் செய்ய வேண்டிய ஆவணங்கள் | 1. விண்ணப்பதாரர் புகைப்படம்<br>2. வயது சான்றுக்காக SSLC / HSC மதிப்பெண் பட்டியல்<br>3. பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு சான்றிதழ்<br>4. வகுப்பு சான்றிதழ்<br>5. ஆதார் அட்டை<br>6. நிரந்தர கணக்கு எண் (PAN Card)<br>7. குடும்ப அட்டை (Ration Card)<br>8. பயனாளியின் பெயரில் வங்கி கணக்கு புத்தக முன் பக்க விவரங்கள்<br>9. வங்கியின் கடன் ஒப்புதலுக்கான சான்றிதழ்<br>10. விரிவான திட்ட அறிக்கை |

வ. தட்சிணாமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

20.8.25
பிரிவு அலுவலர்